# சமச்சீர்க்கல்வி பாடத்திட்டம்

## பாடத்திட்டம்

## எட்டாம் வகுப்பு – தமிழ்

## பருவம் : 3

www.Padasalai.Net

## தமிழ்நாடு அரசு

## பாடநூல் பாடத்திட்டம்

# பாடத்திட்டம்

# எட்டாம் வகுப்பு – தமிழ்

# பருவம் : 3

அன்பிற்கினிய ஆசிரியப் பெருமக்களே,

தமிழ்நாடு அரசின் சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட மூன்றாம் பருவம், எட்டாம் வகுப்பு தமிழ் பாடநூலில் இடம் பெற்றுள்ள பாடங்களுக்கான பாடத்திட்டங்களை அதற்குரிய படிநிலைகளின் அடிப்படையில் எழுதியுள்ளேன்.

படித்துப் பாருங்கள். உங்களுக்கு உதவும் என்றால் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பிழைகள் இருப்பின் தெரியப்படுத்துங்கள். அடுத்த மின்பதிப்பில் திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

இதை விட இன்னும் சிறப்பாக செய்யலாம் என்ற உங்களது மனக்கருத்துகளையும் தெரியப்படுத்துங்கள்.

தங்களது மேலான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் ஆவலோடு எதிர்நோக்குகிறேன்.

பி.டி.எப். வடித்தில் இருக்கும் இப்பாடத்திட்டத்தைத் தங்களது ஆன்ட்ராய்டு செல்பேசியில் பதிவிறக்கம் செய்து குறிப்பு நோட்டைப் போலவும் இதைப் பயன்படுத்தலாம். கணினியில் பதிவிறக்கம் செய்து கொண்டு மன வரைபடங்களை புரோஜக்டர் மூலம் வகுப்பறையிலும் பயன்படுத்தலாம்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இம்முயற்சி பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

உங்கள் கருத்துகளையும் தெரிவியுங்கள்.

அன்புடன்,

**பா. விஜயராமன்,**

ஆசிரியர்.

coimbatorev6@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VIII

**1. பாடத்தலைப்பு** : 1. திருக்குறள் - பண்புடைமை (செய்யுள்)

**2. அலகு** : 1

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** : பண்புடைமையை அடையும் வழிமுறைகளை அறிதல்.
பண்புடைமையையால் அடையும் சிறப்புகளை அறிதல்.
பண்பில்லாதவர்களின் இழிநிலையை அறிதல்.

**6. பாட அறிமுகம்** :


**அ) ஆர்வமூட்டல்** : *ஒவ்வொரு மாணவரையும் நற்பண்பு ஒன்றும், தீய பண்பு ஒன்றும் கூறச் செய்தல். ஏன் நற்பண்புகளைக் கடைபிடிக்க வேண்டும்? தீய பண்புகளைக் கடைபிடிக்கக் கூடாது? என்று மாணவர்களை வினவுதல்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: நாடு நலம் பெற தனிமனிதர் திருந்த வேண்டுமா? சமுதாயம் திருந்த வேண்டுமா? என்ற தலைப்பில் வகுப்பில் உள்ள மாணவர்களை இரு பிரிவாக்கிப் பட்டிமன்றம் போல் தங்கள் கருத்துகளைக் கூறச் செய்தல்.

**7. புதிய சொற்கள்** :

| | | | |
|---|---|---|---|
| மாய்வது | - அழிவது | நயமில | - தீங்கு |
| மண்புக்கு | - மண்ணோடு மண்ணாக | ஞாலம் | - உலகம் |
| அரங்கலம் | - வாளைத்திருத்தம்மையாக்கும் கருவி | | |
| நயன் | - நேர்மை | ஆன்ற | - உயர்ந்த |
| பாடறிவார் | - நெறியுடையார் | நண்பு | - நட்பு |

**8. மனவரைபடம்** :




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. தொகுத்தல்** : 1. பண்பை வளர்க்கும் வழிகள் 2. பண்பில்லாமையின் இழிவுகள் 3. பண்புடைமையின் சிறப்புகள் 4. பண்பில்லை எனில் நிகழ்பவைகள் ஆகிய தலைப்புகளில் குறட்பாக்களைத் தொகுக்கக் கூறுதல்.

**10. வழங்குதல்** : மாணவர்கள் தாங்கள் குழுவாகத் தொகுத்தக் கருத்துகளை குழுவாக வழங்கச் செய்தல்.

**11. வலுவூட்டல்** : மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் குறட்பாக்களையும், அதன் பொருளையும் வாய்விட்டுப் படிக்கும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு** :

1. உலகம் நிலைபெற்றிருக்கக் காரணம் யாது?
2. மரம்போல்வர் யார்?
3. பகலும் இருளாகத் தோன்றும் யாருக்கு?
4. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எத்தகையது?
5. உயர்ந்த பண்பாளரின் இயல்புகள் யாவை?

**13. குறைதீர்க் கற்பித்தல்:** மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:** திருவள்ளுவரின் உருவப்படத்தை வரைந்து வரக் கூறுதல்.

**15. தொடர்பணி** : *பண்புடைமை எனும் இவ்வதிகாரத்தில் உள்ள குறட்பாக்களுக்கு மு.வ அவர்களின் உரை நயத்தையும், பரிமேலழகர் அவர்களின் உரை நயத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து வருக.*

**16. நாள்** :

**17. ஆசிரியர் கையொப்பம்** :

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VIII

**1. பாடத்தலைப்பு** : 1. தமிழர் வானியல் (உரைநடை)

**2. அலகு** : 1

**3. அலகின் தன்மை** : மரம் மற்றும் கிளை

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள் :**

1. தமிழர் அறிவைப் புலப்படுத்தும் பழந்தமிழ் நூல்கள் குறித்து அறிதல்.
2. திருக்குறள் சொல்லும் தமிழர் வானியல் அறிவை அறிதல்.
3. கோள்கள் குறித்த தமிழர் வானியல் அறிவை அறிதல்.
4. வான்வழிப் பயணம் குறித்த தமிழர் வானியல் அறிவை அறிதல்.

**6. பாட அறிமுகம் :**

**அ) ஆர்வமூட்டல்** : *விமானத்தைக் கண்டறிந்தவர்கள் யார்? ரைட் சகோதரர்கள். அவர்கள் விமானத்தைக் கண்டறிந்தவதற்கு முன்னே விமானம் குறித்த தெளிவான அறிவைத் தமிழர்கள் பெற்றிருந்தனர். இராமாயணத்தில் புட்பக விமானத்தில் இராவணன் பறந்த செய்தியினை அறியலாம். சீவக சிந்தாமணியில் மயில்பொறி வாகனம் குறித்த செய்தியினைக் காணலாம். பெருங்கதை என்ற நூலிலும் வானூர்தி குறித்த செய்த செய்திகள் உள்ளன. தமிழர்கள் தொன்மையான அறிவியல் அறிவைப் பெற்றிருந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம். பழந்தமிழர்களின் இன்னபிற அறிவியல் தொன்மையை இப்பாடத்தில் காண்போம்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: தமிழர்களின் பொறியியல் நுட்பத்தை விளக்கும் வகையிலான நீ அறிந்த இரண்டு சான்றுகள் கூறுக. *(விடை : கல்லணை, தஞ்சை பெரிய கோயில்)*

**7. புதிய சொற்கள் :**


| | | |
|---|---|---|
| வானியல் | தொல்காப்பியம் | திருமந்திரம் |
| சீவக சிந்தாமணி | சிலப்பதிகாரம் | மணிமேகலை |
| கம்பராமாயணம் | திருவாசகம் | ஐம்பூதம் |
| விசும்பு = வானம் | நிக்கோலஸ்கிராப்ஸ் | கலீலியோ |
| ஞாயிற்று வட்டம் | நாள்மீன் | கோள்மீன் |
| திங்கள் மறைப்பு = சந்திர கிரகணம் | | செவ்வாய் |
| புதன் | வெள்ளி | வியாழன் |
| வானூர்தி | வலவன் | புறநானூறு |
| திங்கள் = நிலவு | ஞாயிறு = சூரியன் | அண்ட வெளி |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**௮. மனவரைபடம் :**




**௯. தொகுத்தல் :**

பழந்தமிழர் நூல்களில் உள்ள வானியல் கருத்துகளைத் தொகுத்தல் :

| வ. எண் | நூலின் பெயர் | வானியல் கருத்து |
|---|---|---|
| 1. | தொல்காப்பியம் | ஐம்பூதம் |
| 2. | சிலப்பதிகாரம் | வான்வழிப் பயணக் குறிப்பு |
| 3. | மணிமேகலை | வான்வழிப் பயணக் குறிப்பு |
| 4. | சீவக சிந்தாமணி | மயிற்பொறி வாகனம் |
| 5. | இராமாயணம் | புட்பக விமானம் |
| 6. | பெருங்கதை | வானூர்தி வடிவம், செயல்முறைகள் குறித்த விவரங்கள் |
| 7. | திருமந்திரம் | ஐம்பூதம் |
| 8. | திருவாசகம் | ஐம்பூதம் |
| 9. | புறநானூறு | ஞாயிற்று வட்டம், ஐம்பூதம் |
| 10. | திருக்குறள் | உலகம் உருண்டை, நாள்மீன் பற்றிய கருத்து, திங்கள் மறைப்பு (சந்திர கிரகணம்) |

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**10. வழங்குதல் :**

கீழ்கண்ட தலைப்புகளில் மாணவர்களைக் கருத்துகளைத் தொகுத்து வழங்குமாறுக் கூறுதல் :

1. பழந்தமிழர் வானியல் அறிவைப் புலப்படுத்தும் நூல்கள்
2. தொல்காப்பியமும், புறநானூறும் குறிப்பிடும் ஐம்பூதங்கள் குறித்த கருத்துகள்
3. திருக்குறள் சொல்லும் உலகம் உருண்டை எனும் கருத்து
4. ஞாயிற்று வட்டம், கோள்மீன், நாள்மீன் குறித்த கருத்துகள்.
5. கோள்கள் குறித்த தமிழர்களின் அறிவு நுட்பம்
6. வான்வழிப் பயணம் குறித்த தமிழர்களின் அறிவு நுட்பம்

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. தமிழர் வானியல் அறிவைப் புலப்படுத்தும் பழந்தமிழர் நூல்கள் யாவை?
2. உலகம் உருண்டை எனக் கூறிய மேலை நாட்டவர்கள் யார்?
3. உலகம் உருண்டை என்பதை திருக்குறள் வழி நின்று நிறுவுக.
4. புறநானூறு குறிப்பிடும் வானியல் கருத்துகள் யாவை?
5. கோள்கள் குறித்த பழந்தமிழர் அறிவைக் விளக்குக.
6. திங்கள் மறைப்புப் பற்றிக் கூறும் திருக்குறள் யாது?
7. தமிழர்களின் வான்வழிப் பயணம் குறித்துக் கூறுக.

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல். தேவையான இடங்களில் ஆசிரியர் வழிகாட்டுதல்.

**14. வகையறி மதிப்பீடு:**

தமிழர்களின் வானியல் அறிவைக் காட்டும் புட்பக விமானத்தை உமது கற்பனைத் திறனைப் பயன்படுத்தி ஓவியமாய்த் தீட்டி வருக.

**15. தொடர்பணி :**

நூலகம் சென்று பழந்தமிழ் குறித்த நூல்களைப் பயின்று, தமிழர்களின் விஞ்ஞான, சிற்ப, கட்டடக்கலை மற்றும் மருத்துவ அறிவைப் புலப்படுத்தும் செய்திகளைத் திரட்டி வருக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VIII

**1. பாடத்தலைப்பு** : 2. வில்லி பாரதம் (செய்யுள்)

**2. அலகு** : 2

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** :

1. கண்ணனின் சிறப்புகளை அறிதல்.
2. கர்ணன் தவப்பேறாக கூறுவதை அறிதல்.

**6. பாட அறிமுகம்** :


**அ) ஆர்வமூட்டல்** : அர்ஜுனனை விட சிறந்த வில் வித்தை வீரன் ஏகலைவன். அதே போல் அர்ஜுனனை விட சிறந்த வில் வித்தை வீரனாக திகழ்ந்தவன் கர்ணன். மகாபாரதப் போரில் தாய் குந்தித் தேவிக்கு அளித்த வரத்திற்காக கர்ணன் சாகவும் துணிகிறான். அதனால் அர்ஜுனனால் அம்பெய்தப்பட்டு களத்தில் வீழ்ந்து கிடக்கும் கர்ணன் கண்ணனின் சிறப்புகளை எண்ணி, கண்ணனின் திருநாமம் கூறி முக்திப் பெறுகிறான். வில்லிபாரத்தில் வரும் இக்காட்சியினை இச்செய்யுளில் இனிக் காண்போம்.

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: செஞ்சோற்றுக் கடன் தீர்த்தவர் என்று மகாபாரத்தில் சொல்லப்படுபவர் யார் என்று அறிவாயா?

**7. புதிய சொற்கள்** :

| | | | |
|---|---|---|---|
| களபம் | – சந்தனம் | புயம் | – தோள் |
| அலங்கல்துழாய் | – மாலைதுளசி | | |
| பகழி | – அம்பு | நாமம் | – பெயர் |
| ஊன் | – தசை | இருநிலம் | – பெரிய உலகம் |
| வான்பெற்ற நதி | – கங்கை | | |

**8. மனவரைபடம்** :




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. தொகுத்தல் :**

மாணவர்களைக் கீழ்காணும் தலைப்புகளில் கருத்துகளைத் தொகுக்கக் கூறுதல் :

1. கண்ணனின் சிறப்புகள்
2. கர்ணனின் தவப்பேறு
3. வில்லிபுத்தூரார் பற்றிய குறிப்புகள்

**10. வழங்குதல் :**

மாணவர்கள் தாங்கள் தொகுத்தக் கருத்துகளைக் குழுவாகவோ அல்லது தனியாகவோ தாங்கள் விரும்பும் வகையில் வழங்கக் கூறுதல்.

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குச் செய்யுளை வாய்விட்டுப் பாடும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. களபம் என்பதன் பொருள் யாது?
2. வில்லிபாரதத்தைப் பாடியவர் யார்?
3. வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் யார்?
4. கண்ணனின் சிறப்புகள் யாவை?
5. கர்ணன் பெற்ற பெரும் பேறு யாது?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

வில்லிபாரதச் செய்யுளை உணர்ச்சிப் பெருக்குடன் பாடிக் காட்டுக.

**15. தொடர்பணி :**

நூலகம் சென்று மகாபாரத நூலில் கர்ணனின் உயர்வைச் சித்தரிக்கும் பகுதியொன்றைப் படித்து வந்து வகுப்பறையில் அனைவர்க்கும் கூறுக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VIII

**1. பாடத்தலைப்பு** : 2. தேவநேயப் பாவாணர் (உரைநடை)

**2. அலகு** : 2

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள் :**

1. தேவநேயப் பாவாணரின் தமிழ்ப்பற்றுக் குறித்த அறிதல்.
2. தேவநேயப் பாவாணரின் வாழ்வில் நிகழ்ந்த தமிழ்ப்பற்றை விளக்கும் நிகழ்வுகளை அறிதல்.
3. தேவநேயப் பாவாணரின் தமிழ்த்தொண்டினையும், அவர் பெற்ற சிறப்புகளையும் அறிதல்.
4. தேவநேயப் பாவாணர் ஆற்றிய தமிழ்ப்பணிகள் குறித்து அறிதல்.

**6. பாட அறிமுகம் :**

**அ) ஆர்வமூட்டல்** : *பஸ், டைம், சைக்கிள், டுவீலர், கார், லாரி, பாக்கெட், கூல் டிரிங்ஸ், சால்ட், சுகர், ரைஸ், வாட்ச், ஆக்ஸிஜன், கார்பன் டை ஆக்ஸைடு, சினிமா, சி.டி, டி.வி, ப்ளட் பிரசர், ஹார்ட் அட்டாக், வாட்டர், செல்போன், கால், பைவ் மினிட்ஸ், சாரி, தேங்க்யூ, ரைட், லெப்ட் போன்ற சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கூறுமாறு மாணவர்களிடம் கேட்டல்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: *சுத்தத் தமிழில் பேச வேண்டும் என்பது சரியா? தூயத் தமிழில் பேச வேண்டும் என்பது சரியா? (விடை : தூயத் தமிழ் என்பதே சரியாகும். ஏனெனில் சுத்தம் என்பது வடமொழிச் சொல்லாகும்)*

**7. புதிய சொற்கள் :**


| | | |
|---|---|---|
| தொன்மை – பழைமை | பரிதிமாற் கலைஞர் | கால்டுவெல் |
| மறைமலையடிகள் | மாண்புற | மொழிஞாயிறு |
| தனித்தமிழ் | இலக்கியப் பெட்டகம் | இலக்கணச் செம்மல் |
| மாந்தம் – மனிதன் | குமரிக்கண்டம் | மொகஞ்சதோரா |
| அரப்பா | வடமொழி – சமஸ்கிருதம் | வல்லாண்மை |
| தாரைமங்கலம் | நீலமலை – நீலகிரி | சொல்லாராய்ச்சி |
| அகர முதலித் திட்டம் | சொற்பிறப்பியல் | பாவாணர் கோட்டம் |
| முறம்பு | சொற்பொழிவு | |

**8. மனவரைபடம் :**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com






www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**9. தொகுத்தல் :**

மாணவர்களைக் கீழ்காணும் தலைப்புகளில் கருத்துகளைத் தொகுக்கக் கூறுதல் :

1. தேவநேயப் பாவாணரின் தமிழ்ப்பற்றை உணர்த்தும் நிகழ்வு
2. தேவநேயப் பாவாணரின் ஆய்வுப்புலம்
3. பகல் உணவும், இரா உணவும்
4. தேவநேயப் பாவாணரின் நீலமலை அனுபவம்
5. தேவநேயப் பாவாணர் எழுதிய நூல்கள்
6. தேவநேயப் பாவாணரும் சொற்பிறப்பியல் அகர முதலியும்
7. தேவநேயப் பாவாணரின் சிறப்புகள்

**10. வழங்குதல் :**

மாணவர்கள் தாங்கள் தொகுத்தக் கருத்துகளைக் குழுவாகவோ அல்லது தனியாகவோ தாங்கள் விரும்பும் வகையில் வழங்கக் கூறுதல்.

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குச் செய்யுளை வாய்விட்டுப் பாடும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. தேவநேயப் பாவாணரின் தமிழ்ப்பற்றை விளக்கும் நிகழ்வைக் கூறுக.
2. தேவநேயப் பாவணரின் ஆய்வு முடிவுகள் யாவை?
3. தாரைமங்கலத்தில் பாவாணருக்கு ஏற்பட்ட அனுபவம் யாது?
4. தேவநேயப் பாவாணர் எழுதிய நூல்கள் சில கூறுக.
5. தேவநேயப் பாவாணரின் தமிழ்த்தொண்டு குறித்துக் கூறுக.
6. தேவநேயப் பாவாணர் பெற்ற பட்டங்கள் யாவை?
7. மதுரை உலகத்தமிழ் மாநாட்டில் பாவாணர் எத்தலைப்பில் உரை நிகழ்த்தினார்?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

தேவநேயப் பாவாணரின் உருவப்படத்தை வரைந்து அட்டையில் ஒட்டி வருக.

**15. தொடர்பணி :**

நூலகம் சென்று தேவநேயப் பாவாணர் எழுதிய நூல்களைப் பயின்று வருக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VIII

**1. பாடத்தலைப்பு** : 3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் (செய்யுள்)

**2. அலகு** : 3

**3. அலகின் தன்மை** : தனித்து நிற்றல்

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள் :**

1. முத்துக்குமர சுவாமியின் சிறப்புகளை அறிதல்.
2. பிள்ளைத் தமிழின் இலக்கணம் குறித்து அறிதல்,
3. குமரகுருபரர் குறித்தும் அவர் இயற்றிய நூல்கள் குறித்தும் அறிதல்.

**6. பாட அறிமுகம் :**

**அ) ஆர்வமூட்டல் :**

*முருகப் பெருமான் தமிழ்க்கடவுளாக கருதப்படுகிறார். முருகனைச் சிறப்பித்து தமிழில் பாடப்பட்டுள்ள நூல்கள் நிறைய உள்ளன. அவைகளுள் குமரகுருபரால் இயற்றப்பெற்றுள்ள முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழும் ஒன்று. இப்பிள்ளைத்தமிழைப் பார்ப்பதற்கு முன் தாலாட்டுப் பாடலான,*

*ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ*
*மாமன் அடிச்சானோ மல்லிகைப் பூ செண்டால*
*அத்தை அடிச்சாளோ அரளிப் பூ செண்டால*
*யார் அடிச்சா நீ சொல்லியழு!*

*என்ற பாடலைப் பற்றி நீங்கள் மாணவர்களாகிய நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

*இத்தகைய தாலாட்டு வகையைச் சார்ந்த நாட்டுப்புறப் பாடலும் பிள்ளைத்தமிழைப் போன்றதே ஆகும். பிள்ளைத்தமிழ் எழுதப்பட்ட ஏட்டிலக்கியம் ஆகும். நாட்டுப்புறப் பாடல் என்பது ஏட்டில் எழுதப்படாத பாட்டிலக்கியம் ஆகும். இனி நமது பாடப்பகுதியான முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழின் வருகைப் பருவத்தில் இடம்பெற்றுள்ள பாடலைக் காண்போம்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா**: *முருகன் என்றால் என்ன பொருள் என்று நீ அறிவாயா?*


**7. புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| மதி | – அறிவு | அமுதகிரணம் | – குளிர்ச்சியான ஒளி |
| உதயம் | – கதிரவன் | மதுரம் | – இனிமை |
| நறவம் | – தேன் | கழுவு துகளர் | – குற்றமற்றவர் |
| சலதி | – கடல் | அலகு இல் | – அளவில்லாத |
| புவனம் | – உலகம் | மதலை | – குழந்தை |

பருதிபுரி – கதிரவன் வழிபட்ட வைத்தீஸ்வரன் கோயில்

**8. மனவரைபடம் :**

www.Padasalai.Net




௯. தொகுத்தல் :

ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரியப் பருவங்களைத் தொகுத்தல்

| வ. எண் | ஆண்பாற் பிள்ளைத்தமிழின் பருவம் | பெண்பாற் பிள்ளைத்தமிழின் பருவம் |
|---|---|---|
| 1. | காப்பு | காப்பு |
| 2. | செங்கீரை | செங்கீரை |
| 3. | தால் | தால் |
| 4. | சப்பாணி | சப்பாணி |
| 5. | முத்தம் | முத்தம் |
| 6. | வருகை | வருகை |
| 7. | அம்புலி | அம்புலி |
| 8. | சிற்றில் | அம்மானை |
| 9. | சிறுபறை | கழங்கு (நீராடல்) |
| 10. | சிறுதேர் | ஊசல் |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**10. வழங்குதல் :**

மாணவர்களைக் கீழ்கண்ட தலைப்புகளில் கருத்துகளைத் தொகுத்து வழங்கக் கூறுதல் :

1. முத்துக்குமாரசுவாமியின் சிறப்புகள்
2. குமரகுருபரர் பற்றிய குறிப்புகள் மற்றும் இயற்றிய நூல்கள்
3. பிள்ளைத்தமிழின் பருவங்கள்

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் வாய்விட்டுக் கவிதைப் பாடும் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. பிள்ளைத்தமிழ் – குறிப்பு வரைக.
2. முத்துக்குமாரசுவாமியின் சிறப்புகளைக் கூறுக.
3. குமரகுருபரர் பற்றி நீ அறிவன யாவை?
4. ஆண்பாற் பிள்ளைத்தமிழின் பருவங்கள் யாவை?
5. பெண்பாற் பிள்ளைத்தமிழின் பருவங்கள் யாவை?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டுப் பாடல்களைத் திரட்டி வந்து பாடிக் காட்டுக.

**15. தொடர்பணி :**

குமரகுருபரர் இயற்றிய பிற நூல்களை நூலகம் சென்று படித்து வருக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பாடத்திட்டம்

## பாடம் : தமிழ் - VIII

**1. பாடத்தலைப்பு** : 3. இலக்கியத்தில் நகைச்சுவை (உரைநடை)

**2. அலகு** : 3

**3. அலகின் தன்மை** : மை சிந்தும் வகை

**4. கற்றல் வகை** : தனிக்கற்றல் மற்றும் குழுக்கற்றல்

**5. கற்றல் திறன்கள்** :

1. நகைச்சுவை தோன்றும் முறை, நகைச்சுவையின் தேவை குறித்து அறிதல்.
2. கம்பராமாயணத்தில் கம்பர் காட்டும் நகைச்சுவைக் காட்சியை அறிதல்.
3. கலிங்கத்துப் பரணி காட்டும் நகைச்சுவை காட்சியை அறிதல்.
4. கவி காளமேகம், அழகிய சொக்கநாதர், பாவேந்தர் பாரதிதாசன், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை ஆகியோரின் பாடல்களில் இடம்பெற்றுள்ள நகைச்சுவையை அறிதல்.

**6. பாட அறிமுகம்** :

**அ) ஆர்வமூட்டல்** :

*மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் அறிந்த நகைச்சுவை துணுக்கு ஒன்றைக் கூறச் செய்தல். பின் ஆசிரியர்,*

*மூன்றையும் மூன்றையும் கூட்டினால் பத்து எப்படி வரும்? என்ற வினாவை மாணர்வகளிடம் எழுப்புதல். மூன்றையும் மூன்றையும் கூட்டினால் ஆறுதானே வரும் என்று மாணவர்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கும் போதே, ஆசிரியர் மாணவர்களிடம் தவறாக கூட்டினால் பத்து வரும் என்று கூறுதல்.*

**ஆ) ஆர்வமூட்டும் வினா:**

*வேகமாக கடையை நோக்கி ஓடும் சிறுவன், கடைக்குச் சென்ற உடன் என்ன வாங்குவான்?*

*(விடை : மூச்சு வாங்குவான்)*

**7. புதிய சொற்கள்** :

| | | | |
|---|---|---|---|
| எள்ளல் | - கேலி | மடமை | - முட்டாள்தனம் |
| நகல்வல்லர் | - சிரித்து மகிழ்வர் | குருதி ஓட்டம் | - இரத்த ஓட்டம் |
| வானுலகம் | - மேல் உலகம் | கலிங்கத்துப்பரணி | - சிற்றிலக்கியம் |
| முட மயிர்கள் | - நரை மயிர்கள் | காளமேகம் | - கவிஞர் |
| அழகிய சொக்கநாதர் | - கவிஞர் | கவி | - குரங்கு |
| கார் | - கருமை | அரைஞாண் | - இடுப்புக் கயிறு |
| கடுக்கண் | - காதணி | பிணையம் | - ஈடு, பணயப் பொருள் |


மருமக்கள் வழி மான்மியம் - தேசிய விநாயகம் எழுதிய நூல்

புதுக்கவிதை - தற்கால மரபு மீறிய கவிதை

நாஞ்சில் நாடு - தெற்கு திருவாங்கூர் பகுதிக்குட்பட்ட நாடு

**8. மனவரைபடம்** :

www.Padasalai.Net




www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. தொகுத்தல் :**

மாணவர்களைக் குழுவாகக் கீழ்கண்ட தலைப்புகளில் கருத்துகளைத் தொகுத்து வழங்கக் கூறுதல் :

1. நகைச்சுவை தோன்றும் விதம் & நகைச்சுவையின் நன்மைகள்
2. கம்பராமாயணத்தில் நகைச்சுவை
3. கலிங்கத்துப்பரணியில் நகைச்சுவை
4. கவி காளமேகப் பாடல்களில் நகைச்சுவை
5. அழகிய சொக்கநாதர் பாடல்களில் நகைச்சுவை
6. பாரதிதாசன் பாடல்களில் நகைச்சுவை
7. தேசிய விநாயகம் பாடல்களில் நகைச்சுவை

**10. வழங்குதல் :**

மாணவர்கள் தாங்கள் குழுவாகத் தொகுத்த கருத்துகளை, தாங்கள் தொகுத்த தலைப்புகளின் அடிப்படையில் வழங்கச் செய்தல்.

**11. வலுவூட்டல் :**

மீத்திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டு மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

**12. மதிப்பீடு :**

1. நகைச்சுவைப் பற்றி காந்தியடிகள் கூறுவது யாது?
2. கம்பரின் நகைச்சுவை உணர்வை அவர்தம் பாடல்வழி விளக்குக.
3. கலிங்கத்துப்பரணியில் இடம் பெற்றுள்ள நகைச்சுவைக் காட்சியை விளக்குக.
4. காளமேகப் புலவரின் நகைச்சுவையுணர்வை விவரிக்க.
5. மயிலின் கழுத்து ஏன் நீண்டு உள்ளது?
6. நகைச்சுவை தோன்றும் விதங்களைக் கூறுக.
7. நகைச்சுவையின் நன்மைகள் யாவை?

**13. குறைதீர்க் கற்பித்தல்:**

மனவரைபடத்தை ஒவ்வொரு மாணவராக விளக்கிக் கூறச் செய்தல்.

**14. வகையறி மதிப்பீடு:**

இதழ்களில் இடம் பெற்றுள்ள நகைச்சுவை துணுக்குகளைத் திரட்டி நகைச்சுவைத் தொகுப்பு தயார் செய்க.

**15. தொடர்பணி :**

உமது கிராமத்தில் வழங்கப்படும் நாட்டுப்புற நகைச்சுவைக் கதைகளைக் கேட்டறிந்து வருக.

**16. நாள் :**

**17. ஆசிரியர் கையொப்பம் :**

**18. தலைமையாசிரியர் கையொப்பம் :**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com